# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1716/30 - 2011 ජූලි 30 වැනි සෙනසුරාදා - 2011.07.30

*1716/30 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்*

கட்டளை

பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் (2 ஆம் அத்தியாயம்) 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 அ பிரிவின் (ஈ) பந்தியின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் 2010, பெப்புருவரி மாதம் 02 ஆம் திகதிய 1639/11 ஆம் இலக்கத்தை கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கடுவெல பிரதேச சபையை கலைப்பது தொடர்பான கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள "2011, ஏப்பிரல் மாதம் முதலாம் திகதி" என்ற பதத்தை நீக்கி அதற்குப் பதிலாக "2011, ஓகத்து மாதம் முதலாம் திகதி " என்ற பதத்தை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

ஏ. எல். எம். அதாஉல்லா,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

கொழும்பு,
2011, யூலை 30.

8 - 394/1

---

### மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

கட்டளை

பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் (2 ஆம் அத்தியாயம்) 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் 2010, பெப்புருவரி மாதம் 02 ஆம் திகதிய, 1639/11 ஆம் இலக்கத்தை கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கடுவெல மாநகர சபையை அமைத்துருவாக்குவது தொடர்பான கட்டளையின் (5) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள, "2011, ஏப்பிரல் மாதம் முதலாம் திகதி "என்ற பதத்தை நீக்கி அதற்குப் பதிலாக "2011, ஓகத்து மாதம் முதலாம் திகதி " என்ற பதத்தை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

ஏ. எல். எம். அதாஉல்லா,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

கொழும்பு,
2011, யூலை 30.

8 - 394/2